மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# தொல்காப்பியம் - மூலம்: பொருளதிகாரம் பதிப்பினை முன்வைத்து

முனைவர் கல்பனா சேக்கிழார்
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை,
அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

தொல்காப்பியம் என்னும் பனுவலைத் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாக இன்று கொண்டாடுகிறோம். ஆனால் தமிழ் நிலப்பரப்பில் தமிழர்களின் நினைவுகளில் அந்நூல் மறக்கடிக்கப்பட்ட காலமும் இருந்துள்ளது. இதனை இறையனார் அகப்பொருள் உருவானதற்கான காரணத்தைக் (குறிப்பாகப் பொருளதிகாரம் குறித்து) கூறும்போது அறியமுடிகிறது. தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கணநூல்கள் தொல்காப்பிய மரபினை உள்வாங்கி உருவாக்கப்பட்டிருந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் அறியப்படாத நூலாகவே இருந்துள்ளது. நன்னூல் பயிலப்பட்ட அளவுக்குத் தொல்காப்பியம் அந்நூற்றாண்டில் பயிலப்படவில்லை. இதனைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடக்கத்தில் நிகழ்த்தப்பட்ட அச்சுப் பதிப்புகளின் மூலம் அறியமுடிகிறது. சி.வை.தாமோதரன் பிள்ளை அவர்கள் தாம் பதிப்பித்த தொல்காப்பிய பொருளதிகார முன்னுரையில் தொல்காப்பிய வரதப்ப முதலியார் ஒருவர் மட்டுமே பாடம் சொல்பவராக இருந்துள்ளதைக் குறிப்பிடுகிறார். ஆக தொல்காப்பியப் பிரதி தொடர் வாசிப்பில் இருந்து அறுபட்டு இருந்த நிலையை உணரமுடிகிறது. 19 ஆம் நூற்றாண்டில் உருவான அச்சுப் பதிப்பும், ஐரோப்பியர்கள் முன்னெடுத்த மொழி ஆய்வும், அவர்கள் மொழியைத் தம்வயப்படுத்தல் (அதிகாரம் / மதம் பரப்பல்) போன்ற காரணங்களால் தொன்மையான நூல்களைத் தேடுதல் என்னும் நிலையை உருவாக்கியது. அந்நிலையில் தொல்காப்பியம் பற்றிய அறிதலும், தேடுதலும், பதிப்பித்தலும் நிகழ்ந்தன. அவை உரையோடு பதிப்பித்தல் மூலம் மட்டும் பதிப்பித்தல் என்னும் இருநிலைகளில் நிகழ்த்தப்பட்டன. அவற்றுள் மூலப்பதிப்பு குறித்த உரையாடலாக அமைகிறது.

## இ. சாமுவேல்பிள்ளையின் பதிப்பில் பொருளதிகாரப் பதிப்பு

ஐரோப்பியர்கள் அறிமுகப்படுத்திய மொழிநூல் (Philology) ஒப்பு மொழிநூல் (Comparative Philology) என்னும் மொழிநூல் அறிவின் பின்புலத்தோடு தமிழ் நூல்களைப்

பதிப்புக்கும் முயற்சியாய் இ. சாமுவேல் பிள்ளை அவர்கள் 1858 இல் நன்னூலையும், தொல்காப்பியத்தையும் ஒப்பிட்டுப் பதிப்பிக்கிறார். ஐரோப்பியர்கள் தமிழ்மொழியைப் பயிலத் தொடங்கிய சூழலில் நன்னூலே மிகுதியாக அறியப்பட்ட பயிலப்பட்ட நூலாக இருந்த நிலையில், 1847 இல் மழைவை மகாலிங்கையர் நச்சினார்க்கினியர் உரையுடன் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தைச் சுவடியில் இருந்ததுபோலவே பதிப்பித்தும், இதனைத் தொடர்ந்து 1858 ஆம் ஆண்டிற்கு முன் நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, நேமிநாதம், யாப்பருங்கலம் (மூலம் மட்டும் பதிப்பு) யாப்பருங்கலக்காரிகை, தொன்னூல் விளக்கம், தண்டியலங்காரம், வெண்பாபாட்டியல் (உரையுடன்) ஆகிய நூல்கள பதிப்பிக்கப்பட்டன. இக்காலக்கட்டத்தில் வெளிவந்துள்ள பதிப்புகளைப் பார்க்கும்போது, ஒரு சிலவற்றைத்தவிர மற்றவை பாடத்திட்டத்திற்காகவும், எளிமையாகப் பயன்படுத்தக்கூடிய நிலையிலுமே தான் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் 1858 ஆம் ஆண்டு இ. சாமுவேல் பிள்ளை நன்னூல் தொல்காப்பியம் முழுதும் ஒப்பிட்டுப் பதிப்பித்திருப்பது முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது.

தொல்காப்பியத்திற்கு எழுந்துள்ள பல்வேறு பதிப்புகளிலும் குறிப்பிடத்தக்க பதிப்பாக விளங்குவது 1858 இல் சாமுவேல்பிள்ளை அவர்கள் வெளியிட்ட தொல்காப்பிய நன்னூல் பதிப்பாகும். இலக்கண ஒப்பு நோக்கு நிலையிலும், மூல பாடப் பதிப்பு நிலையிலும் காலத்தால் முதன்மைபெற்ற சிறப்பு இப்பதிப்புக்கு உண்டு. இ. சுந்தமூர்த்தி அவர்களும் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரமும் பொருளதிகாரமும் முதன்முதலாக இந்த நூலில் தான் அச்சிடப் பெற்றிருந்தன என்கிறார். சூத்திரங்களின் அடைவும், பொருட்சுருக்கமும், மிகத் தெளிவாகக் காட்டப் பெற்றிருந்தன. அறிவுடைய மாணவன், உரையின் துணையின்றி தொல்காப்பியத்தையும், நன்னூலையும் ஒருசேரத் தெரிந்து கொள்ளுவதற்குப் பெரிதும் துணை செய்தது என நீ.கந்தசாமிப்பிள்ளை அவர்களும் இவரின் பதிப்புப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

வால்ற்றர் ஜாயீஸ், பிரிஸிடென்சி கல்லூரியில் பேராசிரியராகப் பணிப்புரிந்தவர். அவர் உருவாக்கிய நூல்கள் மாணவர்களுக்கான பாடத்திட்ட நூல்களாக அமைந்துள்ளன. அவரோடு இணைந்து செயல்பட்ட இ.சாமுவேல் பிள்ளை 1848 இல் நன்னூலுக்கான ஆங்கில மொழிபெயர்ப்பு முதற்பகுதியை வெளியிட்டுள்ளனர். இவர் பாடத்திட்டம் என்னும் அளவில் நூல் உருவாக்கத்தோடு நின்றுவிடாமல் அடுத்த கட்டத்திற்கு நகர்கிறார் என்பதை இனி தாம் மேற்கொள்ளவேண்டிய பணிகளின் திட்டவரையறையை வகுத்துக்கொண்டது குறித்து நீ. கந்தாமி பிள்ளை கூறும் கீழ்க்கண்ட கூற்றிலிருந்த அறிந்துகொள்ளலாம்.

முறைகளிலும் புதிய முறைகளிலும் உள்ள நற்பண்புகளை ஒன்று சேர்த்து இலக்கண இலக்கியப்பணி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் "கிரந்த மந்தண கூடம்"(Tamil Museum and Review of Oriental Philology) என ஒன்றை நிறுவி, தான் வெளியிடவிருப்பனவற்றை, பன்னிரண்டு வகையாகப் பிரித்து வேலை செய்யத் தொடங்கினார்.

இப்பதிப்பு நன்னூல் மட்டும் அறிந்திருந்த ஐரோப்பியர்களுக்கு மரபிலக்கண நூலான தொல்காப்பியத்தையும் அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைந்தது என்று

சொல்லலாம். இதனை அவர் நூலின் முகப்பிலேயே தெளிவுப்படுத்துகிறார். நூலின் முகப்பில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

தொல்காப்பிய நன்னூல் இதனுள் தொல்காப்பியமும் நன்னூலும், தம்முள்ளொற்றுமை வேற்றுமைகள் விளங்க, ஒருபான்மை உதாரண சகிதமாய் சூத்திர சம்பந்தத்துடனே அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்நூல் ஐந்திரபாநீயம் என்றும் சமரசபாஷியசித்தாந்தம் என்றும் இனிப்பெயர் பெறும் பெற்றிக்கேற்ப உத்தேசித்து, வடமொழிவழக்கும் தமிழ்மொழி வழக்கும், ஐங்கிலிய வழக்குங் கொண்டிருக்கின்ற சம்பந்தா சம்பந்தங்களைக் காட்டிப் பூரணவிருத்தியா யெழுதப் புகுந்திருக்கு முரை நூலுக்கு முதற்பிரயத்தனம் இப்பதிப்பு இ. சாமுவேல் பிள்ளையினால், வால்ற்றர் ஜாயீஸ் துரையவர்களுதவியைக் கொண்டு நிறைவேறியது.

நூற்பயன் - இத்தேசாத்தாரிடத்தில் ஐங்கிலிய துரைத்தனத்தார் கல்விவிருத்திபண்ணி வரும்முயற்சியால், இனித் தமிழ் நாட்டின் நன்மைகென்று புதுநூலியற்றுவோர்க்குப் பாஷைநடைகளின் பேதாபேதக்கியானத்திற்கு வேண்டிய, தெளிவு. இ/து,கஅருஅம் ஆண்டு சென்னை மாநகரம், கிறிஸ்த்துமதக்கியான விளக்கச்சங்கத்தார் அச்சுக்கூடத்தில் கானர் துரையவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

எல்லீஸ் உருவாக்கிய சென்னை கல்விச் சங்க மரபில் வரும் மழைவையார் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தைப் பதிப்பிப்பதும், கால்டுவெல்லின் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் நூல் வெளியிடும், அவரைத் தொடர்ந்து ஐரோப்பியத் துரை வால்ற்றர் ஜாயீஸ் உதவியுடன் இ. சாமுவேல் பிள்ளை நன்னூல் தொல்காப்பியத்தை இணைத்துப் பதிப்பிப்பதும் நிகழ்கிறது. இச்செயற்பாடுகளை நோக்கும்பொழுது, தமிழ் புலமை மரபு, சமூகவெளி நினைவுகளில் மறக்கடிக்கப்பட்டிருந்த தொல்காப்பியம் என்னும் இலக்கணப் பிரதியைத் தமிழ் மக்களுக்கு அடையாளப்படுத்தியதோடு வளமான மொழி சமஸ்கிருதம் என்ற கருத்தாக்கத்தினை உடைத்து அதற்கு இணையாகத் தமிழ் மொழியை நிறுத்தியவர்கள் ஐரோப்பியர்கள் என்பதை அறியமுடிகிறது.

இ.சாமுவேல் பிள்ளை அவர்கள் பதிப்பித்த நன்னூல் தொல்காப்பியம் என்னும் நூல் Book I,Book II, Book III என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. Book III இன் தொடக்கத்தில் THOLCAPYA-NUNNOOL, BOOK II பொருளதிகாரம் GRAMMER OF GENERAL KNOWLEDGE, CHAPTER 1 அகத்திணையியல், OF SOIL SEASONS OF THE YEAR AND PRODUCTIONS எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்கான காரணம் குறித்து, Book III The last grand division of the Tholcapyam, forming pp.32 to 69, the end of this volume, is also published in the original text only, for the benefit of such students as might wish to pursue is மாணவர்களின் பயன்பாட்டுக்காகப் பதிப்பிப்பிதாகக் கூறுகிறார்.

புத்தகம் மூன்றில் உள்ள பொருளதிகார நூற்பாக்களை நம்பியகப் பொருள், ஐயனாரிதனார் வெண்பாமாலை, புறப்பொருட் பன்னிரு படலம் ஆகிய நூற்பாக்களோடு ஒப்பிட்டுப் பதிப்பித்துள்ளார். நூலின் இறுதியில் உள்ள Memoranda பகுதியில் பொருளதிகாரச் செய்திகள் எளிய முறையில் ஆங்கிலத்தில் விளக்கப்பட்டுள்ளது. இதில்

களவியல், கற்பியல் குறித்தான செய்திகளை இந்துக்கள் வாழ்க்கை முறைகளுள் ஒன்று எனச் சாமுவேல் பிள்ளை காட்டுகிறார்.

பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ள அகத்திணை புறத்திணை இயல்களை நம்பியகப்பொருளோடும், புறப்பொருள் வெண்பா மாலையோடும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இந்த ஒப்பீட்டிற்குத் தாண்டவராய முதலியார் 1835 இல் பதிப்பித்த இலக்கணப் பஞ்சகங்களில் நன்னூல் மூலமும் அகப்பொருள் மூலமும் என்ற பதிப்பைப் பயன்படுத்தியுள்ளார். இப்பதிப்புக் குறித்துத் தவறாகப் புரிந்துகொண்ட க.ப.அறவாணன் அவர்கள் தாண்டவராய முதலியார் 1835 ஆம் ஆண்டே தொல்காப்பியம் அகத்திணையியல், புறத்திணையியலை வெளியிட்டுவிட்டதாகத் தனது தொல்காப்பியக் களஞ்சியத்திலும் எழுநூறு ஆண்டுகளில் நன்னூலிலும் குறிப்பிடுகிறார். இத்தகைய ஒரு பதிப்பு இதுவரை வெளிவரவில்லை என்பதை சாமுவேல் பிள்ளைதான் பொருளதிகாரத்தை முதன்முதலில் பதிப்பித்தவர் என்பதை அறிஞர் பலரும் நிறுவுகின்றனர்.

நூல் உருவாக்கும் குறித்துப் பேசும் இவர், தொல்காப்பியம் பதிப்பதற்காகப் பயன்படுத்திய சுவடிகளைப் பற்றிய குறிப்புகளைத் தரவில்லை. இவர் பதிப்பில் தொல்காப்பிய மொத்த நூற்பாக்களின் எண்ணிக்கை 1583. பொருளதிகாரத்தில் 667 நூற்பாக்கள் தரப்பட்டுள்ளன. நூற்பாக்கள் அடி அமைப்பில் இல்லாமல், அப்படியே உரைநடை வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. ஒரு அடிக்கு இருசீர் எனச் சந்தி பிரிக்கப்படாமல் உள்ளதோடு ஒரு அடி முடிந்து அடித்த அடி தொடங்குவதை வேறுபடுத்திக்காட்டக் காற்புள்ளி இடப்பட்டுள்ளது. பாடவேறுபாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. பாடவேறுபாடுகள் நூற்பாவின் இடையிலும், இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இடையிடையே ஆங்கிலத்தில் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளதன. பொருளதிகாரத்தில் பாடவேறுபாடுகள் எழுத்து, சொல்லைவிட அதிகளவில் தரப்பட்டுள்ளன. இறுதி பகுதியில் பொருளதிகாரம் குறித்தும், ஒவ்வொரு இயல் குறித்தும் ஆங்கிலத்தில் சுருக்கமாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

**கா. நமச்சிவாயம் முதலியர் பதிப்பு**

தொல்காப்பியம் பொருளதிகரம் 1924 இல் கா. நமச்சிவாயம் முதலியரால் இரண்டாம் பகுதியாக வெளியிடப்பட்டது. இப்பதிப்பினுள் பதிப்பிற்கான தேவையை, சங்கநூல் முதலியவற்றை ஆராய்ந்து, பண்டைத் தமிழ் மக்களின் வழக்க ஒழுக்கங்களை உண்மையுற அறிதல்வேண்டும் என்னும் அவா அறிஞர் உள்ளத்தில் தோன்றி, அதன் பயனாக இந்நாளில் சிற்சில ஆராய்ச்சி நூல்கள் தோன்றுவன ஆயின. ஆகவே, தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களையும் படித்து தேர்தல் வேண்டும் என்னும் நோக்கம் தமிழ்நாட்டில் ஆங்காங்கே கிளைத்திருக்கிறது இக்காலத்தே பண்டைத் தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் மூலப்பாடமாக வெளிவரின் அவை பெரிதும் பயனுடையவாம் என்பது கருதி, சங்கம் மருவிய இலக்கண இலக்கியங்களைக் கைச்சுவடிகளாகப் பதிப்பிக்கத் தொடங்கினேன் என்று குறிப்பிடுவதோடு இதற்கு முன் பதிப்பித்தவர்கள் விவரத்தினையும் முன்னுரையில் குறிப்பிடுகிறார். ஆனால் பதிப்பிற்காக வேறு சுவடிகள் பார்க்கப்பட்டனவா என்னும் குறிப்பு கொடுக்கப்படவில்லை.

இப்பதிப்பில் கடின சந்திகளைப் பிரித்து, அவ்வச் சூத்திரங்கள் நுதலிய பொருளைத் தலைப்பில் அமைத்து, பாடபேதங்களையும் ஆங்காங்கே காட்டியுள்ளேன் எனப் பதிப்பினுள் பின்பற்றியுள்ள பதிப்புமுறைகள் தரப்பட்டுள்ளன. பொருளடக்கத்தை தொடக்கத்தில் பெற்று இறுதியில் சூத்திர முதற்குறிப்பு அகராதியுடன் இம்மூலப் பதிப்பு நிறைவுபெறுகிறது. இளம்பூரணர் கொண்ட பாடத்தினை அடிப்படையாகக் கொண்டும் பிற உரையாசிரியர்கள் கொண்ட பாடவேறுபாடுகள் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன. பொருள் மூலத்தில் 121 இடங்களில் பாடபேதம் குறித்துள்ளார்.

**பி. சிதம்பரபுன்னைவன நாத முதலியார் பதிப்பு**

1922 இல் பி. சிதம்பரபுன்னைவன நாத முதலியார் பதிப்பு தொல்காப்பிய மூலம் முழுவதும் உடையதாக வெளிவந்தது. இதில் அவருடைய கருத்து, பாடபேத குறிப்பு முதலியவை இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியம் மூலம், கருத்து, பாடபேதக்குறிப்பு முதலியவற்றுடன் நச்சினார்க்கினியர் மூலத்தை ஆராதமாகக் கொண்டு தொல்காப்பியம் இவருக்கு முன் வந்த பதிப்புகள் குறித்த விவரம். நூற்பாக்களின் எண்ணிக்கையை உறுதி செய்து குறித்தும் ஆராய்ந்து எழுதியுள்ளார். பதிப்புரையில், இப்பதிப்பில் உரையாசிரியர்களாலும் பதிப்பாளர்களாலும் சுட்டப்பட்ட பாடபேதங்கள் அன்னவர் பெயர் குறிப்புடன் குறித்தலைப்பில் அடியிற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதில் செய்யுளியல் மூலத்திற்குக்காட்டப்பட்டிருக்கும் பிரதி பாடங்கள் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் பதிப்பிலிருந்தும் குறிப்பிடப்பட்டவை. பாடப்பேதக் குறிப்புடனும், சூத்திர நுதல்பொருளுடனும் வெளியிடப்படும் இம்மூலப்பதிப்பு பழ நூற்பதிப்பாளர்க்கும், மேற்கோள் எடுத்துக்காட்டுவார்க்கும், பெரிதும் பயன்படக்கூடுமென்றெண்ணுகிறேன்.

யாருடைய பதிப்பிலிருந்து பிரதிபாடங்களை எடுத்துக்கொண்டார் என்னும் குறிப்பினையும், இப்பதிப்பின் பயன்பாட்டையும் குறிப்பிடுவதோடு, இந்நூலிலுள்ள உரியியல், மரபியல், செய்யுளியல்களின் சூத்திரங்கள் தமிழரிஞ்சர்களால் மனனஞ் செய்யப் பெறுதல் நன்மையுடைத்து என மனனம் பெறும் பகுதியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்பதிப்பினை புதுமுறை பதிப்பு என்றும், தமிழ்நாட்டிலுள்ள மக்கள் யாவரும் வாங்கி வாசித்துப் பயனடைய வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

**தி.சு. பாலசுந்தரம் பிள்ளையின் (இளவழகனார்)**

1943 இல் தி.சு. பாலசுந்தரம் பிள்ளையின்(இளவழகனார்) தொல்காப்பியம் மூலம் கழகத்தின் மூலம் வந்தது. பதிப்புரையில் தொல்காப்பியம் ஒரு வாழ்க்கை நூல், நூலாசிரியர், அவர் காலம், நூலின் அமைப்பு, தொல்காப்பியம் ஒரு முழுமுதல் நூல், தமிழ் மக்கள் கடமை, ஆகியவை குறித்து பதிவுசெய்துள்ளதோடு, பதிப்புமுறை பற்றி, இத்தொல்காப்பிய மூலப் பதிப்பில், சில இனிய பதிப்புமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் இயலின் தலைப்புக்கும் விளக்கம், ஒவ்வோர் இயலுள்ளும் உட்பிரிவுகள், ஒவ்வொரு நூற்பாவுக்கும் விளக்கமான தனித்தலைப்புகள் கொடுத்து, நூற்பாக்களைப் படித்துக்கொண்டு போகும் போதே பொருளுணர்ச்சிக்குத் தடையில்லாத வகையில் நூன் முழுவதற்கும் அவ்வப் பக்கங்களின் அடியில் உரிய உரைக் குறிப்புகளும் எழுதி, இந்நூல் பதிப்பிடப

பெற்றிருக்கிறது. மாணவர்களுக்கேயன்றி, வேறு எத்திறத்தவர்க்கும் இந்நூல் நன்கு பயன்படுமென்று நம்புகிறேன் என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

**மர்ரே பதிப்பு**

குழுப்பதிப்பாக 1960 இல் எஸ்.ராஜத்தால் வெளியிடப்பட்டது. இப்பதிப்பு பதிப்பாசிரியர் குழுவினால் பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து வெளியிடப்பெற்றது. சீர் பிரித்து எளிதில் அனைவருக்கும் புரியும்வண்ணம், அதிகாரங்களும் இயல் பகுப்பும் நூற்பா அளவும், இளம்பூரணர் முதலியோர் ஒவ்வோர் இயலிலும் கொண்ட நூற்பா அளவும், இயல்களின் நூற்பாத் தொகை வேறுபாட்டின் விளக்கம் முதலியவை இப்பதிப்பில் கொடுக்கப்பெற்றுள்ளன. நச்சினார்க்கினியர் பாடத்தை அடிப்படையாகக்கொண்டு நூற்பாக்கள் சந்தி பிரித்து முறைப்படுத்தப்பட்டுள்ளன. பொருள் செல்நெறிக்கு ஏற்றவாறு நிறுத்தற் குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் பின்னிணைப்பில் அதிகாரங்களுள் இயல் பகுப்பும் நூற்பா அளவு, இயல்களில் நூற்பாத் தொகை வேறுபாட்டின் விளக்கம், பாடவேறுபாடுகள், பொருள் அடைவு, நூற்பா முதற்குறிப்பகராதி போன்றன இடம்பெற்ற பதிப்பாகத் திகழ்கிறது. இதன் இரண்டாம் பதிப்பைச் 1978 இல் சென்னையில் உள்ள சாந்திசாதனா அறக்கட்டளை வெளியிட்டுள்ளது. மாணவர் பதிப்பு ரூ.3.75க்கும், சாதா பதிப்பு ரூ.6.00 க்கும், நூலகப் பதிப்பு ரூ.9.00 க்கும் என இப்பதிப்பு மூன்று நிலைகளில் வெளிவந்துள்ளது. இதன் மூன்றாம் பதிப்பை நிழற்படப் பதிப்பாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 1981 இல் வெளியிட்டுள்ளது.

**தொல்காப்பிய ஒப்பியல்**

1975 இல் க.ப.அறவாணன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தொல்காப்பிய ஒப்பியல் என்னும் தலைப்பில் தொல்காப்பியம் மூலம் ஜைன இளைஞர் மன்ற வெளியீடாக வெளிவந்துள்ளது. இதற்கு முன் வந்த அறுபத்தெட்டுப் பதிப்புகளில் இப்பதிப்பு வேறுபட்டது என்றும் முதன்முதலாக, தொல்காப்பியத்திற்கு ஒத்த இலக்கண நூற்பாக்களின் எண்கள் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளதாவும் இப்பதிப்பிற்கு டாக்டர் ச.வே.சு சுப்பிரமணியம் அவர்களது இலக்கணத்தொகை, மர்ரே வெளியீடான தொல்காப்பியம், பேராசிரியர் வையாபுரிபிள்ளையும் வ.உ.சிதம்பனாரும் பதிப்பித்த தொல்காப்பியப் பதிப்புகள் பதிப்பிற்குப் பயன்படுத்தியதாகவும் பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பதிப்பினுள் நூற்பாக்களின் பொருளுக்கு ஏற்ப உரிய தலைப்புகளும், இளம்பூரணர் கொண்ட வரிசை நூற்பா தொடக்கத்திலும், இயல்வாரி எண் வரிசை நூற்பா இறுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நூல் இறுதியில் தொல்காப்பியப் பாடவேறுபாடுகள், விளக்கங்கள், உரையாசிரியர்கள் கொண்ட நூற்பா அளவு, நூற்பா முதற்குறிப்பகராதி ஆகியன இடம்பெற்றுள்ளன.

இலக்கணவிளக்கம், இறையனார் களவியல், களவியல் காரிகை, தமிழ்நெறி விளக்கம், தண்டியலங்காரம், தொன்னூல் விளக்கம், நம்பியகப்பொருள், நன்னூல், பாட்டியல், புறப்பொருள் வெண்பாமாலை, மாறன் அகப்பொருள், முத்துவீரியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம் அகப்பொருள் தமிழ் என்றே

குறிக்கப்படும், தமிழ்நுதலியது என்று குறிப்பர் இறையனார் களவியலார், தமிழியல் வழக்கம் என்பர் அவிநயனார,(44) தமிழ் அறிவுறுத்தியது என்பர் குறிஞ்சிப்பாட்டில் கபிலர், தமிழ்நெறி வழக்கம் என்பர் கம்பர்.

**தொல்காப்பிய மூலம் பாடவேறுபாடுகள்- ஆழ்நோக்காய்வு**

1996 இல் பாடவேறுபாடுகள்- ஆழ்நோக்காய்வு பெற்றதாகத் தொல்காப்பிய மூலம் கே.எம்.வேங்கட்ராமையா, ச.வே.சுப்பிரமணியம், ப.வே.நாகராசன் இவர்களால் உருவாக்கப் பட்டுப் பன்னாட்டுத் திராவிட மொழியில் கழக வெளியீடாக பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்பினைப் பற்றி, மிகப் பெரும்பாலும் இப்பதிப்பில் மிகப் பழமையன பதிப்புகளின் மூலபாடம் ஏற்கப் பெற்றுள்ளன. அவற்றுள்ளும் எழுத்திற்கு இளம்பூரணர் பாடமும், சொல்லிற்குச் சேனாவரையர் பாடமும், பொருளிற்கு நச்சர்,பேராசிரியர் பாடமும் ஓரளவு அதிகமாக ஏற்கப்பட்டுள்ளன. எனினும் எந்த ஒரு பதிப்பையோ அல்லது சுவடியையோ அப்படியே அடிப்படையாகக் கொண்டு இங்கு நூற்பாக்கள் பெயர்த்தெழுதப் பெறவில்லை.

தொல்காப்பியப் பதிப்புகள் பலவற்றோடும், டாக்டர் உ.வே.சா. நூலகத்தில் உள்ள பல தொல்காப்பியச் சுவடிகளையும் ஒப்பு நோக்கி, தொல்காப்பியப் பாடவேறுபாடுகள் என்ற கையெழுத்துப் பிரதியை முனைவர் ச.வே.சு. உருவாக்கினார். அக்கையெழுத்துப் படியின் அடிப்படையில் மீண்டும், ஒப்புநோக்கி ஒவ்வொரு நூற்பாவிலும் கண்ட வேறுபாடுகட்கு நூற்பாவில் எண்கள் கொடுக்கப்பட்டன. பிறகு அவ்வெண்ணின் கீழ் அவ்வேறுபாடு காணப்படும் இடம் சேர்க்கப்பெற்றுச் சிறு குறிப்பும் தரப்பட்டுள்ளது. ஆங்காங்கு இன்றியமையாத இடங்களில் தக்க அடிக்குறிப்புகள் தரப்பெற்றுள்ளன. அண்மையில் தோன்றியுள்ள புதிய உரைகள், உரைவளப் பதிப்புகள் ஆகியவற்றில் காணப்படும் பாடபேதங்களும் அவைபற்றிய ஆய்வுரைகளும் உரிய இடங்களில் சேர்க்கப்பெற்றுள்ளன. பயன்மிக்க பிறசேர்க்கைகள் பலவும் இணைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் தோன்றியுள்ள புதிய உரைகள், உரைவளப் பதிப்புகள் ஆகியவற்றில் காணப்படும் பாடபேதங்களும், அவை பற்றிய ஆய்வுரைகளும் உரிய இடங்களில் சேர்க்கப் பெற்றுள்ளன. பயன்மிக்க பிறசேர்க்கைகள் பலவும் இணைக்கப்பட்டுள்ளன என பதிப்புரையில் விரிவாக பதிப்பில் பின்பற்றியுள்ள நெறிமுறைகள் குறித்தும், பதிப்பின் தேவை குறித்தும், பதிப்பில் பதிப்பிக்க பயன்பட்ட பிரதிகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. பிற்சேர்க்கையாகத் தொல்காப்பியரையும், நூலையும் போற்றும் பழம் பாடல்கள், பழைய தொல்காப்பியப் பதிப்புகளில் இடம்பெற்றுள்ள சிறப்புப் பாயிரக்கவிகள், இப்பதிப்பிற்காகப் பார்க்கப்பெற்ற சென்னை டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்தின் தொல்காப்பியச் சுவடிகள், தொல்காப்பியப் பதிப்புகள், அனைத்துலக அளவில் இதுவரை அறியப்பெற்றுள்ள தொல்காப்பிய ஓலைச்சுவடிகள் காகிதச் சுவடிகள் பற்றிய விவரம் போன்றனவும், இறுதியாக நூற்பா முதற் குறிப்பு அகர நிரலும் முறையே கொடுக்கப்பட்டுள்ளது.

2002 இல் இரா.சீனிவாசன், வே. கருணாநிதி இவர்கள் மூலப்பதிப்பு ஒன்று வெளியிட்டுள்ளார்கள். 2007 இல் ச.வே.சுப்பிரமணியன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சிதம்பரம் மெய்யப்பன் பதிப்பகம் இலக்கண நூல்கள் மூலம் முழுதும் குறிப்பு விளக்கங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. இதில் தமிழிலுள்ள 49 இலக்கண நூல்களின் மூலம் இடம்பெற்றுள்ளது. இவற்றில் முதலாவதாக 1610 நூற்பாவுக்கும் தொடரெண்

கொண்ட தொல்காப்பியம் மூலம் அமைந்துள்ளது. இதன் இறுதியில் நூற்பா முதற்குறிப்பகராதி இடம்பெற்றுள்ளது. அனைத்து இலக்கண நூல்களின் மூலங்களைத் தொகுத்து நோக்குதல் என்னும் நிலையில் இப்பதிப்பு உள்ளது.

**மின் பதிப்பு**

தமிழ் இணையக் கல்விக்கழகம் 2011-2012 ஆண்டு திட்டத்தின் கீழ் மொழியியல் அடிப்படையில் 56 நூல்களுக்கு இலக்கணக்குறிப்புகள் கொடுக்கப்பட்டு மின்பதிப்பாகத் தரவிறக்கம் செய்துகொள்ளும்படி வெளியிட்டுள்ளது. அவற்றுள் முதல் நூலாக தொல்காப்பியம் அமைந்துள்ளது. மதுரைத்திட்டம், நுண்ணறிபேசி போன்றவற்றில் மின்நூல்களாகத் தொல்காப்பியம் கிடைக்கிறது. ஆனால் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் கொடுத்துள்ள இத்தொல்காப்பிய மின்பதிப்பு கணினி புரிந்துகொள்ளகூடிய நிலையில் தமிழில் தரவுதளம் உருவாக்குவதற்கான அடிப்படையாக அமைந்துள்ளது. இயற்கை மொழியாய்வு செய்வதற்கான அடிப்படையாகவும், அடுத்த கட்டத்திற்குப் பதிப்பினை எடுத்துச் செல்லும் முயற்சியாகவும் உள்ளது. இத்திட்டம் முழுமைபெற்று வரும்பொழுது ஆய்வினை வேறு ஒருதளத்தில் முன்னெடுக்க முடியும். கீழ்க்கண்ட இணையப் பகுதியில் இப்பதிப்பினைக் காணமுடியும்.

http://www.tamilvu.org/coresite/html/cwannotate.htm

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொல்காப்பியம் மூலத்தைப் பாடல் (ஒலி) வடிவில் வெளியிட்டுள்ளது. இசையோடு கேட்கும் போது மனனம் செய்வதற்கு எளிதாக இருக்கும். மக்கள் மத்தியில் தொல்காப்பியத்தை எடுத்துச் செல்லும் முயற்சியாகவும் இது அமைகிறது. கீழ்க்கண்ட இணைப்பில் இதனைப் பதிவிறக்கி கொள்ளலாம்.

http://www.cict.in/veliyeedugal_esai-kuruvattukal.php

மேற்கண்ட மூலப் பதிப்புகளின் போக்குகளை நோக்கும் பொழுது, இ. சாமுவேல் பிள்ளை அவர்களுடைய காலத்தில் தொல்காப்பியம் குறித்து விதந்து பேசப்பட்டிருந்தாலும், இவர் ஐரோப்பியருக்கு அறிமுமாகியிருந்த நன்னூலுடன் இணைத்து தொல்காப்பியப் பிரதியினைப் பதிப்பித்திருப்பதற்குக் காரணம் ஐரோப்பியர்களுக்கு மட்டுமல்லாமல், தமிழர்களுக்கும் அறிமுப்படுத்துவது நோக்கமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது. இப்பதிப்பினுள் மொழிநூலறிவு, ஒப்பியல் ஆய்வு, பாடவேறுபாட்டாய்வு ஆகிய அறிவு நுட்பங்களை உள்வாங்கிய பதிப்பாக இப்பதிப்பினை உருவாக்கியிருப்பது அன்றைய சூழலில் பதிப்பிக்கப்பட்ட பதிப்பிலிருந்து வேறுபட்ட பதிப்பாக விளங்கியது எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த பதிப்பினைக் காட்டிலும் எளிமைபடுத்துதல், தொல்காப்பியத்தை மாணவர்களுக்காகப் பாடநோக்கில் பதிப்பித்தல் என்பது மட்டுமல்லாமல், பொதுவெளிக்கு கொண்டுச் செல்லுதல் என்னும் நோக்கில் பதிப்பிக்கப்பட்டிருப்பதை உணரமுடிகிறது. கா. நமச்சிவாய முதலியார், பி.சி.புன்னைவனநாத முதலியர், இளவழகனார் போன்றோரின் பதிப்புக்கள் அத்தன்மைத்தன எனலாம். மர்ரே பதிப்பு அந்நோக்கினது என்றாலும் இன்னும் எளிமை படுத்துதல் என்னும் நிலையில் அமைந்துள்ளது. தொல்காப்பிய ஒப்பியல்

தொல்காப்பியத்திற்கு பின் வந்த இலக்கண நூல்களோடு ஒப்பிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளதால், தொல்காப்பியப் பொருளதிகார மரபு பின் வந்த இலக்கணங்களில் எவ்வாறு தாக்கம் பெற்றுள்ளன என்பதை அறியும் நோக்கில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இ. சாமுவேல் பிள்ளையின் பதிப்பினுள் பிற இலக்கண நூல்களோடு ஒப்பிடப்படிருந்தாலும் சில நூல்களுடன் மட்டுமே ஒப்பிடப்பட்டுள்ளது. க.ப. அறவாணன் அவர்கள் பதிப்பு ஒப்பிட்டு ஆய்வாருக்குப் பயனுள்ளதாக அமையும். திராவிட மொழியியல் கழகத் தொல்காப்பிய மூலம் வெளியீடு ஆய்வுநோக்கில் ஆய்வுலகிற்குப் பயன்படும் வகையில் வெளிந்த பதிப்பாகத் திகழ்கிறது. முனைவர் ச.வே.சுப்பிரமணியம் அவர்களின் பதிப்பு முழுமையாக இலக்கணத்தை தொகுத்து நோக்குதல் என்னும் நிலையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மின்பதிப்புகளில் செம்மொழித் தமிழாய்வு மத்தியநிறுவனம் வெளியிட்டுள்ள ஒலி வடிவ தொல்காப்பிய மூலம் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கான முயற்சியாக அமைகிறது. தமிழ் இணையக் கல்விக்கழகம் மொழியியல் நோக்கில் உருவாக்கியுள்ள மின்னாக்கம் தமிழ்த்தரவு தளத்துக்கான பதிப்பாக அமைகிறது.

**உசாத்துணை**

1. கிருட்டிணமூர்த்தி.கோ, தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, சென்னைப் பல்கலைக்கழகம்,1990.
2. சாமுவேல் பிள்ளை.இ, தொல்காப்பியம் நன்னூல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ, 2010
3. சிவகாமி.ச. (ப.ஆ) தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,2009
4. சுப்பிரமணியன்.ச.வே, தொல்காப்பியப் பதிப்புகள்,உ.த.ஆ.நி. சென்னை,2007.
5. தாமோதரன்பிள்ளை. சி.வை,தொல்காப்பியம் பொருளதிகாரம், Printed at the Scottish Press by Grayes, Cookson and Co,1885
6. தாமோதரன்பிள்ளை. சி.வை, பதிப்புரைகளின் தொகுப்பு, தாமோதரன், குமரன் பப்ளிஷர்ஸ், மறுபதிப்பு, 2004.
7. மதுகேஸ்வரன்.பா, தொல்காப்பியப் பதிப்பு வரலாறு, சந்தியா பதிப்பகம், சென்னை, 2008.
8. வேங்கடசாமி சீனி.மயில், 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், சாரதா மாணிக்கம் பதிப்பகம், 2003
9. தாமோதரன்பிள்ளை. சி.வை, பதிப்புரைகளின் தொகுப்பு, தாமோதரன், குமரன் பப்ளிஷர்ஸ், மறுபதிப்பு, 2004.
10. http://keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/19809-2012-05-19-07-12-42